# காங்கிரசின் கனவை தகர்த்தெறியும் த.வெ.க.!
# இனி எழுவதும் - வெல்வதும் தி.மு.கழகம்தான்!

இருக்கிறதை விட்டுவிட்டு பறக்குறதுக்கு ஆசைப்பட்டவர்களுக்குக் கிடைத்த தண்டனை போல உடன் இருந்த தி.மு.க.வை விட்டுவிட்டு காவிக் கூட்டம் பெற்ற பிள்ளை எனத் தெரிந்தும், த.வெ.க.வுக்கு ஆசைப்பட்ட காங்கிரசுக்கு அவமானம் கூடுகிறது.

அரசனை நம்பி புருஷனை இழந்ததைப் போல, த.வெ.க.வை நம்பி தி.மு.க.வை இழந்து காங்கிரஸ் தவிக்கிறது.

த.வெ.க.வினர் அடுத்த பிரதமர் "விஜய்" என முழங்கியதைப் பார்த்து கலங்கி நிற்கிறது காங்கிரஸ்.

சட்டமன்றத்திலேயே, காங்கிரசார் முன்னிலையிலேயே ஆதவ் அர்ஜூனா பேசுகையில் "தென் மாநிலங்களிலிருந்து பிரதமர் ஒருவரை தேர்வு செய்ய வேண்டும்" என முதல்வர் விஜயை மனதில் வைத்துப் பேசினார்.

அமைச்சர் ஜெகதீஸ்வரி "இன்றைய முதல்வர் விஜய், அடுத்த தேர்தலில் பிரதமராவார். அதில் எந்தக் கருத்து மாறுபாடும் கிடையாது. ஒவ்வொரு வினாடியும் நாம் அனைவரும் அதை நோக்கிப் பயணிப்போம்" என்கிறார்.

அமைச்சர் ஸ்ரீநாத் பேசுகையில், "முதல்வர் விஜய் எங்கே போனாலும் போகஸ் இருக்கும். டெல்லி போனாலும் எங்கும் விஜயாகத்தான் இருக்கும்" என்கிறார்.

சேதுபதி எம்.எல்.ஏ. பேசுகையில், "வரும் 2029 லோக்சபா தேர்தலில் முதல்வர் விஜயை பிரதமராக்க மக்கள் தயாராகி விட்டனர்" என்கிறார்.

வெறும் கையில் முழம்போட ஆசைப்பட்டவன் போல, ஒரே ஒரு உறுப்பினர்கூட இல்லாத த.வெ.க. வினர் பிரதமர் பதவிக்கு ஆசைப்படுகின்றனர்.

அது ஆசை அல்ல. நாங்கள் ராகுலுக்கு பிரதமர் ஆக ஆதரவு தரவில்லை என பா.ஜ.க.வுக்கு காட்டுகின்ற கண்சாடை ஆகும்.

இவற்றை எல்லாம் கேட்டு காங்கிரஸ் கொதித்து எழுந்திருக்க வேண்டாமா? ஆனால் காங்கிரஸ் மாமன் அடிச்சானோ, மல்லிகைப்பூச் செண்டாலே என்பது போல மென்மையான மறுப்பை தருகின்றனர்.

ஒரு பக்கம் மாணிக்கம் தாகூர். "த.வெ.க.வினர் இன்னும் ரசிகர்கள் மனநிலையிலேயே உள்ளனர்" என்றும், "இந்தியா கூட்டணியில் எம்.பி. இல்லாத த.வெ.க.வை சேர்த்திட அனுமதிக்க முடியாது" என்கிறார்.

இந்தியா கூட்டணியில் 23 கட்சிகள் உள்ளன. இதில் எம்.பி.கள் இல்லாத கட்சிகளே இல்லையா? ஏன் த.வெ.க. சேரவில்லை.

கபடக்காரியின் முத்தத்திற்கு ஆசைப்பட்டு, கட்டிக்காத்த தாயின் அன்பை இழந்த காளையின் நிலையில் காங்கிரஸ் தவிக்கிறது.

கட்சி மாறும் அ.தி.மு.க. எண்ணிக்கை மாற மாற காங்கிரசு மாப்பிள்ளைக் கணக்கா திண்ணையில் இருமிக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

இரண்டு அமைச்சர் என்கிற லட்சங்களை பெரியதாக நினைத்து. "ராகுல் பிரதமர்" என்கிற லட்சியக் கனவுகளை கோட்டை விட்டனர் தமிழக காங்கிரசினர்.

காங்கிரஸை ஓரங்கட்டத்தான், செங்கோட்டையன் 10 அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் த.வெ.க.விற்கு வரத் தயாராக இருக்கிறார்கள் என்கிறார்.

47ல் 6 நபர்கள் விலகினாலும் இன்று இருக்கும் ஏறத்தாழ 41 பேரில் 3-ல் 2 பங்கு இருந்தால்தான் கட்சிமாறுதல் செல்லும். ஆனால் 10 பேர் வருகிறார்கள் என செங்கோட்டையன் கூறுவது சட்டத்தினை ஜனநாயகத்தினை காலில் போட்டு மிதிப்பதற்குச் சமம். இதற்காகவே செங்கோட்டையனிடம் இருக்கும் அமைச்சர் பொறுப்பைப் பறிக்க வேண்டும்.

இருக்க இடம் இல்லை, படுக்கப் பாய்கேட்ட கதையாய்ச் சட்டமன்றத்தை ஒழுங்காக நடத்தத் தெரியவில்லை. ஒரு அமைச்சர்கூட இலாகா பற்றி பேசுவது இல்லை. இந்த லட்சணத்தில் பிரதமர் பதவி மீது ஆசையாம்.

40 எம்.பி.க்களை வெற்றி பெற வைத்த தளபதி மு.க. ஸ்டாலின்தான். முதன் முதலில் "பாரதப் பிரதமர் வேட்பாளர்" என "ராகுலை" அறிவித்தார். இந்தியா கூட்டணியை உருவாக்கினார். இந்தியா கூட்டணியில் பெரும்பகுதி கட்சியினரை சமாதானம் செய்து "ராகுல் பிரதமர்" என முழக்கமிட்டார் தளபதி ஸ்டாலின். தளபதியை ஒருபோதும் பிரதமர் என தி.மு.க.வினர் சொல்லிக் கொண்டதே இல்லை.

எங்கே விஜயினை, "அடுத்த பிரதமர் வேட்பாளர் ராகுல்" என அறிவிக்கச் சொல்லுங்கள் பார்க்கலாம்.

அத்தைக்கு கூட மீசை முளைக்கும். விஜயிடம் இருந்து ராகுல் பிரதமர் என்கிற வார்த்தை வராது.

அமைச்சர் நிர்மல்குமார், லோக்சபா தேர்தல் முடிந்து த.வெ.க.விற்கு எம்.பி.க்கள் கிடைத்தபின் இந்தியா கூட்டணியில் செயல்படுவது குறித்து முடிவெடுக்க முடியும் என்கிறார்.



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

அப்படி என்றால் வரும் 2029 தேர்தலில் இந்தியா கூட்டணி இல்லை. தனித்துத் தான் நிற்போம். வென்றதற்குப் பிறகு யோசிக்கலாம் என்கிறாரா அமைச்சர் நிர்மல்குமார். அப்படி என்றால் தமிழகத்தில் காங்கிரஸ் கூட்டணிக்கு 39 சீட்டு என்பதற்குப் பதில் ஜீரோதான் என்கிற மாதிரிதான் என்கிறார். எதிர்த்துப் பேச வேண்டிய காங்கிரசார் மௌன கீதம் பாடுகின்றனர்.

நிர்மல் குமார் சொல்கிறார். தி.மு.க.வினர் அறிவாலயத்தை வாடகைக்கு விடணுமாம். அறிவாலயத்தின் செங்கற்களைக் கூட வாடகைக்கு வாங்குவதற்கு எவருக்கும் சக்தி இல்லை. வாடகைக்கு விடுவதற்கும். விற்பதற்கும் தி.மு.க.வில் நூற்றுக் கணக்கான அறிவாலயங்களும், அடிப்படை அரசியல் கூட்டமும் இருக்கின்றன. உங்கள் பாட்டனால்கூட அதைச் சாதிக்க முடியாது.

ஆனால் த.வெ.க.விற்கு விற்பதற்கு என என்ன உள்ளது? சென்னையில் தலைமைக் கட்டிடம் இருக்கிறதா? தி.மு.க.விற்கு முரசொலி இருக்கிறது. த.வெ.க.விற்கு தினசரி இதழ் இருக்கிறதா?

தி.மு.க.விற்கு கலைஞர் டி.வி. இருக்கிறது. த.வெ.க.வுக்கு என்ன இருக்கிறது?

எதிர்த்த வீட்டுக்காரருக்கு எட்டுப் புள்ள இருக்கிறது என மலடி மல்லாந்து படுத்துகிட்டு கத்தினாளாம், அதுபோல உள்ளது அமைச்சர் நிர்மல்குமாரின் பேச்சு.

எதிர்க்கட்சிக்காரர்களும் பெருமைப்படும் அளவுக்கு அரசியல் செய்யாமல், மூன்றாம் தர பேச்சாளர்கள் போல் அச்சில் ஏற்றிட தகுதி இல்லாத வார்த்தைகளைத் த.வெ.க.வினர் பேச வேண்டாம்.

வீழ்வது அவர்களது வெற்றிக்கழகம்தான்!

இனி எழுவதும் வெல்வதும் தி.மு.கழகம்தான்!!



சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கிழக்கு பகுதி மாவட்டப் பிரதிநிதி ஆர்.ரஜினிபாபு இல்லத் திருமண வரவேற்பு விழா நடைபெற்றது. இதில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# பல்ட்டி அடித்த விஜய்!

## தி.மு.க. ஐ.டி.விங் ஆதாரத்துடன் விளக்கம்!

**தகுதின்னு சொல்லி ஏமாத்த மாட்டேன்னு சொல்லிட்டு இப்படி பல்ட்டி அடிக்கலாமா விஜய் சார்.**




# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் சத்யா - டார்லிங் ராஜா மறைவு!

## மாவட்டப் பொறுப்பாளர் வல்லூர் எம்,எஸ்,கே,ரமேஷ் ராஜ் மலர்மாலை அணிவித்து குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்!

*திருவள்ளூர், ஆக. 28 -*

*திருவள்ளூர் கிழக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் அருள்மொழியின் கணவர் சத்யா அவர்கள், கடந்த 24.08.2026 - திங்கள் கிழமை அன்று திடீரென இயற்கை எய்தினார்.*

*இதையடுத்து, அவரது இல்லத்திற்கு நேரில் சென்ற மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், சத்யா அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.*

*தொடர்ந்து, குடும்பத்தினரை சந்தித்து ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்தார்.*


*இதேபோல், திருவள்ளூர் கிழக்கு தொண்டரணி துணை அமைப்பாளர் டார்லிங் ராஜா அவர்கள் வெங்கல் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார். இத்துயரச் செய்தி அறிந்த மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், நேரில் சென்று அன்னாரது உடலுக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.*

*பின்னர், அவரது குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறியதுடன், இந்த துயரமான நேரத்தில் கழகத் தோழர்கள் அனைவரும் குடும்பத்தினருக்கு துணை நிற்பார்கள் என தெரிவித்தார்.*

*இந்த இரங்கல் நிகழ்வுகளில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எல்லாபுரம் ஜெ.மூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், ஜான் பொன்னுசாமி, நிர்வாகிகள் பா.து.தமிழரசன், காண்டீப்பன், சுமன், சீனிவாசன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பலர் கலந்து கொண்டு மறைந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கே.டி.எஸ். மணி**
**ஆகஸ்ட் 28 (1993)**



செங்கல்பட்டு மாவட்டத்தின் தி.மு.க. முன்னோடிகளில் ஒருவர். தி.மு.க. நடத்திய பல போராட்டங்களில் பங்கு கொண்டு சிறை சென்றவர்.

செங்கல்பட்டு மாவட்டக் கழகச் செயலாளராகவும் காஞ்சிபுரம் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**